ஜூன் 16

மனன வசனம்

இரகசியம்,
மகா பாபிலோன்,
வேசிகளுக்கும்
பூமியிலுள்ள
அருவருப்புகளுக்கும்
தாய் என்னும்
நாமம்
அவள்
நெற்றியில்
எழுதியிருந்தது.
வெளி 17:5.

ஆராய்ச்சிக்கு

வெளி 14:8;
வெளி 16:19;
ஏசாயா 52:9;
வெளி 18:1-10;
வெளி 16:12-16;
1இராஜா 18:1-40;
1கொரி 15:1,2.

ஜூன் 16 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

பாடம் 12

# பாபிலோனும் அர்மகெதோனும்



வெளிப்படுத்தலில் உருவகங்களும், பழைய ஏற்பாட்டு வசனங்களும் அதிகம் காணப்படுகின்றன. உதாரணமாக, பாபிலோன் என்கிற பெயர் வெளிப் படுத்தலில் ஆறுமுறை வருகிறது. ஆனால் இந்தப் பாபிலோன், உலக வரலாற்றில் நூற்றுக்கணக்கான வருடங்களுக்குமுன் இருந்த நேபுகாத்நேச்சாரின் பண்டைய சாம்ராஜ்யம் அல்ல. மாறாக, இந்தப் பழைய ஏற்பாட்டு சாம்ராஜ்யத்தை ஓர் உருவகமாகப் பயன்படுத்தி ஒரு சத்தியத்தை யோவான் வலியுறுத்து கிறார். மிகப்பெரிய அரசியல்-மத வல்லமையாக இருந்து தேவனுடைய மக்களை அடக்கிய பாபி லோன், கடைசி நாட்களில் இதேபோல செயல்படமுற் படுகிற மிகப்பெரிய அரசியல்-மத வல்லமைகளைச் சுட்டிக் காட்டப் பயன்படுகிறது.

அர்மகெதோன் என்கிற வார்த்தையும் அது போன்றதுதான். இந்த வார்த்தை வெளிப்படுத்தலில் மட்டும்தான் வருகிறது; ஆனால், ‘மெகிதோ மலை’ என்று அர்த்தமுடைய ஒரு எபிரெய சொற்றொடரி லிருந்து இந்த வார்த்தை வந்துள்ளது; இது முற்கால இஸ்ரவேலிலிருந்த ஓர் இடம். அர்மகெதோன்பற்றிய ஊகங்களுக்கு பஞ்சமே இல்லை; உலக வரலாற்றின் முடிவில் மெகிதோவில் மிகப்பெரிய அளவில் இராணுவ யுத்தம் ஒன்று நடக்க இருப்பதாக அநேகர் நினைக்கிறார்கள்.

பாபிலோன் மற்றும் அர்மகெதோன்பற்றியும், இந்த உருவகங்கள் மூலம் வேதாகமம் நமக்குக் கற்றுத் தரும் பாடங்கள்பற்றியும் இந்த வாரம் ஆராய்வோம்.

*2018, ஜூன் 23 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

## அவளுடைய உக்கிரமான மது

**வெளிப்படுத்தலில் வெளி 14:8; 16:19; 17:5; 18:2,10,21 ஆகிய ஆறு இடங்களில் பாபிலோன்பற்றிக் குறிப்பிடப்படுகிறது. பழைய ஏற்பாட்டில் பாபிலோன் பற்றிச் சொல்லப்படும் சம்பவத்தை மனதில் வையுங்கள்; கடைசிக்கால நிகழ்வுகளின் பின்னணியில் பாபிலோனை வைத்து என்ன உண்மைகளை இந்த வசனங்கள் வலியுறுத்துகின்றன?**

---

எருசலேம், பாபிலோன் ஆகிய இரண்டு பட்டணங்களைப்பற்றிய சம்பவங்கள் அடங்கிய புத்தகம்தான் வேதாகமம் என்று சிலர் சொல்வார்கள். வேதாகமம் முழுவதிலும் எருசலேம் என்பது தேவனுடைய நகரத்தையும், அவருடைய உடன்படிக்கை மக்களையும் சுட்டிக்காட்டுகிறது. சங் 102:22; ஏசா 52:9; 65:19; வெளி 3:12. அதேசமயம் பாபிலோன் என்பது கொடுமையையும் வன்முறையையும் பொய்மார்க்கத்தையும் தேவனுக்கு எதிரான கலகத்தையும் சுட்டிக்காட்டுகிறது.

உதாரணத்திற்கு, பாபேல் கோபுரத்தைப் பாருங்கள். ஆதி 11:9. 'பாபேல்' என்பதற்கான எபிரெய வார்த்தைதான் 'பாபிலோன்' ராஜ்யத்தைச் சுட்டிக்காட்டவும் பயன்பட்டுள்ளது. 'பாபிலோனிலுள்ள' சபையிலிருந்து வாழ்த்துதலை அனுப்புவதாக 1பேதுரு 5:13இல் பேதுரு கூறுகிறார். இன்று ஈராக்கில் இருக்கும், அழிந்துபோன பாபிலோனை இங்கு அவர் குறிப்பிடவில்லை, சபைக்கு உபத்திரவத்தைத் தரவிருந்த ரோமை குறிப்பிடுகிறார்; இது பொதுவாக எல்லாருக்கும் தெரியும். எனவே, ரோமின் செயல்பாடுகள்பற்றி வலியுறுத்த வெளிப்படுத்தல் புத்தகம் இந்த வார்த்தையைப் பயன்படுத்துவது சுவாரஸ்யமானது.

**உலகத்திலும், தேவனுடைய பிள்ளைகளிலும் பாபிலோன் உண்டாக்கிய தீய செல்வாக்குபற்றி வெளி 14:8; 18:3 என்ன சொல்கின்றன?**

---

வெளிப்படுத்தல் சொல்கிறபடி, பாபிலோன் சுட்டிக்காட்டுகிற வல்லமையானது, உலகம்முழுவதிலும் பரந்து, விரிந்து காணப்படும் சீர்கேடுமிக்க ஒரு செல்வாக்காகும். 'வேசித்தனமாகிய உக்கிரமான மது' என்கிற சொற்றொடரானது பொய்க்கோட்பாட்டையும், பொய்ப்போதகத்தையும் சீர்கேடான நடவடிக்கைகளையும் சுட்டிக்காட்டுவது தெளிவாகத் தெரிகிறது. வெளி 14:8. பாபிலோன் என்பது தீமையின் ஓர் அடையாளம்; அது 'எல்லா ஜாதிகளிலும்' பரவியுள்ளது. வெளி 18:3. எனவே, எந்தவொரு மனிதனும் சீர்கெட்டுப் போகாதபடிக்கு எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

---

இன்று உலகம்முழுவதிலும் காணப்படும் சீர்கேட்டையும் குழப்பத்தையும் அநியாயத்தையும் பாருங்கள். இயேசுவிலும் அவருடைய வார்த்தையிலும் நாம் வேரூன்றி இருக்கவேண்டுமென்று இவை எவ்வாறு வலியுறுத்துகின்றன?

திங்கள், ஜூன் 18

## பாபிலோன் விழுந்தது

பாபிலோனின் செல்வாக்கு உலகில் வெகுதூரம் பரவி, சீர்கேட்டை உண்டாக்கியிருந்தாலும், ஒருநாளில் அதற்கு முடிவுக்கட்டப்படும் என்று வெளிப்படுத்தல் புத்தகம் கூறுகிறது.

**'மகா பாபிலோன்'பற்றி வெளி 18:1–10 என்ன சொல்கிறது?**

---

---

வெளி 14:8இல், பாபிலோன் விழுகைபற்றி இரண்டாம் தூதன் சொன்ன செய்தியை வெளி 18:2 மீண்டும் சொல்கிறது. பாபிலோன் எவ்வளவு சீர்கெட்டிருந்தது என்பதை இது தெரிவிக்கிறது.

'வேதாகமம் சொல்வதைப் பாருங்கள்: ஆண்டவருடைய வருகைக்கு முன்பு, 'சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும் கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகல வித வஞ்சகத்தோடும்' சாத்தான் செயல்படுவான்.' 'இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின் மேலுள்ள அன்பை அங்கிகரியாதவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தில்' விழுவார்கள். 2தெச 2:9-11. இந்த நிலை உருவானபின் கிறிஸ்தவ உலகெங்கிலும் சபையும் அரசாங்கமும் கைகோர்க்கும்; அதன்பிறகு பாபிலோனின் விழுகை முற்றுப்பெறும். படிப்படியாக இந்த மாற்றம் நிகழும். வெளி 14:8 முற்றிலுமாக நிறைவேறுவது இனி நடக்கப்போகும் ஒன்று.' - *EGW, GC, p 389, 390.*

'முற்றிலுமாக நிறைவேறுகிற' காலம் எப்போது வருமென்று தேவனுக்கு மட்டுமே தெரியும். ஆனால் இந்த வசனங்கள் ஒரு விஷயத்தை உறுதிப்படுத்துகின்றன; அதாவது, பாபிலோன் தன் மிகுந்த தீமையின்நிமித்தம் ஒரு நாளில் தேவனுடைய நியாயத்தீர்ப்பைச் சந்திக்கப்போகிறது. 'அவளுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது, அவளுடைய அநியாயங்களை தேவன் நினைவு கூர்ந்தார்.' வெளி 18:5. முற்காலப் பாபிலோன்பற்றி எரேமியா 51:9 சொல்கிறதை இந்த வார்த்தைகள் நினைவூட்டுகின்றன; எனவே இந்த பாபிலோனும் நியாயந்தீர்க்கப்படுகிற ஒரு நாள் நிச்சயம் வரும். இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவுமில்லை. பண்டைய பாபிலோன் நியாயந்தீர்க்கப்பட்டது. தானி 5. பாபிலோன் உட்பட ஒவ்வொருவருமே தங்களுடைய செய்கைகளுக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டுமென்று பல இடங்களில் வேதாகமம் வலியுறுத்துகிறது. அந்த நியாயத்தீர்ப்பில் நமக்காகப் பரிந்துபேசுவதற்கு ஒருவர் நிற்கப்போகிறார் என்பதுதான் நமக்கு ஆறுதலான விஷயம். 1யோவான் 2:1; தானி 7:21. இல்லையென்றால், பாபிலோனுக்கு நேரிடுகிற அதே கதிதான் நமக்கும் நேரிடும்.

இன்று அநியாயமும் அக்கிரமமும் தண்டனையிலிருந்து தப்ப நேரிடலாம்; ஆனால், தேவனுடைய இறுதி நியாயத்தீர்ப்பு நாளில் அவை தண்டிக்கப்படுமென வாக்குரைக்கப்பட்டுள்ளது. இது நமக்கு எவ்வளவு ஆறுதலைத் தருகிறது?

செவ்வாய், ஜூன் 19

## அர்மகெதோன்

அநேகருக்கு வெளிப்படுத்தல் புத்தகம்பற்றி அதிகம் தெரியாது; அதைப் பிரபலப்படுத்திய ஒரு வார்த்தை அர்மகெதோன். வெளி 16:16. பூமி தப்புமா, தப்பாதா என்பதை முடிவுசெய்கிற ஓர் இறுதி யுத்தத்தை இந்த வார்த்தை சுட்டிக் காட்டுவதாக மதநம்பிக்கை இல்லாதவர்களும் நம்புகிறார்கள். இராட்சத விண் கல் ஒன்று பூமியைத் தாக்கி அழிக்கத் தயாராக இருப்பதுபோல **'அர்மகெதோன்'** என்கிற ஓர் ஆங்கிலத் திரைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. மதநம்பிக்கை இல்லாத வர்களும்கூட ஓரளவுக்கு உலகத்தின் முடிவுபற்றி யோசிக்கிறார்கள்.

வெளிப்படுத்தலை நன்கு வாசித்து, அதை நம்புகிற பல கிறிஸ்தவர்கள்கூட, உலகத்தின் முடிவில் மத்திய கிழக்குப் பகுதியில் உண்மையிலேயே ஓர் இராணுவ யுத்தம் நடக்கப்போவதாகவும், அதுதான் அர்மகெதோன் யுத்தம் என்றும் நினைக்கிறார்கள். 20 கோடி வீரர்கள் அடங்கிய ஆசியப் படை ஒன்று வடஇஸ்ர வேலுக்குள் நுழைவதால் உண்டாகிற யுத்தம்தான் அது என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. அந்தப் பகுதியில் காணப்படுகிற பல்வேறு இராணுவ-அரசியல் சச்சரவுகள் இறுதியில் இராணுவப் போராக வெடித்து, மெகிதோ பகுதியில் அர்மகெதோன் யுத்தமாக நடைபெறுமென்றும் சிலர் நினைக்கிறார்கள்.

ஆனால் இதற்கு முற்றிலும் மாறுபட்ட ஒரு காட்சியை வேதாகமம் காட்டு கிறது. அர்மகெதோன் என்பது இரண்டு எதிரி நாடுகளுக்கிடையேயான யுத்த மல்ல, மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள இரண்டு சாராருக்கு இடையே நடக்கிற யுத்தம். பொருளாதார-அரசியல்ரீதியான காரணிகள் பலவும் இதில் சம்பந்தப்பட்டிருந்தாலும், இது பொருளாதாரத்தையோ அரசியலையோ முன் வைத்து நடக்கும் யுத்தமல்ல; மதநம்பிக்கை சம்பந்தமான யுத்தம்.

**அர்மகெதோன்பற்றி அறிந்துகொள்ள வெளி 16:12–16 போதும். என்ன புரிகிறது?**

**முதலாவது**, எல்லாமே அடையாளமாக அப்பகுதி சொல்வதைக் கவனியுங் கள். வலுசர்ப்பத்தின் வாயிலிருந்தும், மிருகத்தின் வாயிலிருந்தும், கள்ளத்தீர்க்க தரிசியின் வாயிலிருந்தும் தவளைக்கு ஒப்பான ஆவிகள் வருகின்றன. வெளி 13இன் வல்லமைகள் அவை. 'கள்ளத்தீர்க்கதரிசி' என்பது வெளி 13:11 சொல்கிற பூமிமிருகமாகத்தான் இருக்கவேண்டும். 'பிசாசின் ஆவிகள் சர்வ வல்லமை யுள்ள தேவனுடைய மகாநாளில்' நடக்கிற யுத்தத்திற்குச் செல்கின்றன. வெளி 16:14; எனவே, இது மாபெரும் போராட்டம் என்பது புரிகிறது. எப்படிப் பார்த் தாலும் அர்மகெதோன் யுத்தமானது, கிறிஸ்து பக்கம் உள்ளவர்களுக்கும் சாத் தான் பக்கம் உள்ளவர்களுக்கும் நடக்கிற உலகளாவிய யுத்தம். வெளிப்படுத்தல் சொல்கிற பாபிலோன், இன்றைய ஈராக்கின் ஒரு மூலையில் இருக்கிற ஓர் இடத்தைக் குறிப்பிடாததுபோல, அர்மகெதோன் என்பது மெகிதோ பகுதியில் நடக்கும் எந்த இராணுவப் போரையும் சுட்டிக்காட்டவில்லை.

வெளி **16:15**ஐ வாசியுங்கள். இவ்வளவு நடந்தாலும்கூட இயேசு நமக்கு நற்செய்தியைச் சொல்லித் தேற்றுகிறார். அதாவது அவருடைய வருகையையும், அவருடைய நீதியால் நாம் மூடப்பட வேண்டியதையும்பற்றிய வாக்குறுதி கொடுக்கப்படுகிறது. நாம் ஆவிக்குரிய ஒரு யுத்தத்தில் ஈடுபட்டிருக்கிறோம் என்பதைப் புரிந்துகொள்ள இது எவ்வாறு உதவுகிறது?

## அர்மகெதோனும் கர்மேல் மலையும் - பகுதி I

அர்மகெதோன் யுத்தம் என்றால் என்ன? முதலாவது, இந்தப் பெயருக்கு 'மெகிதோ மலை' என்று பெயர். ஆனால், அந்தப் பகுதியில் மெகிதோ என்கிற பெயரில் மலை எதுவும் இல்லை; கர்மேல் மலைதான் அருகில் உள்ளது. அதனால், மெகிதோ மலை என்பது கர்மேல் மலை என்று வேத அறிஞர்கள் கருதுகிறார்கள்.

மேலும், கர்மேல் மலையில்தான் எலியாவும் பாகாலின் கள்ளத்தீர்க்கதரிசிகளும் சவால்விட்டு மோதிக்கொண்டார்கள்; எனவே, வெளி 13 சொல்லும் நிகழ்வுக்கு அந்த நிகழ்ச்சி முன்னடையாளமாக இருப்பதாகவும் வேத அறிஞர்கள் கருதுகிறார்கள்.

வலுசர்ப்பம், மிருகம், கள்ளத்தீர்க்கதரிசிபற்றி வெளி 16:13 சொல்கிறது; இந்தப் பொய்த்திரித்துவம்பற்றி, வெளி 13ம் பேசுவதை 9ஆம் வாரப் பாடத்தில் படித்தோம்.

வெளி 13இன் சம்வங்கள் உச்சக்கட்டத்தை எட்டுகின்றன. வச 13,14; அப்போது இரண்டாம் மிருகம் அசாதாரண கிரியைகளைச் செய்கிறது; ' அது மனுஷருக்குமுன்பாக வானத்திலிருந்து பூமியின்மேல் அக்கினியை இறங்கப் பண்ணியது.' வெளி 13:13. இந்த நிகழ்வுகளைத் தொடர்ந்து, தேவனோடு சாத்தான் நேரடியாக மோதுகிறான்; மேலும் ' மிருகத்திற்குச் செய்யப்பட்ட சிலையை'வணங்குகிறவர்களும்கூட தேவனைத் தொழுகிறவர்களோடு யுத்தம் பண்ண புறப்படுகிறார்கள். வெளி 13:14.

**வெளிப்படுத்தல் சொல்கிறபடி இறுதி நிகழ்வுகளின் போக்கு எவ்வாறு இருக்கும் என்பதை அறிந்துகொள்ள 1இராஜா 18:1–18 சொல்கிற நிகழ்வுகள் எவ்வாறு உதவுகின்றன?**

மாபெரும் போராட்டத்தின் காட்சியை இங்கு மிகத்தெளிவாகக் காணலாம். பிரச்சனை என்னவென்று எலியா மிகத்தெளிவாகக் கூறுகிறார். வச 18. ஜனங்கள் தேவனுடைய பிரமாணங்களை மறந்து, பொய்தேவர்களை நாடி, அவற்றைப் பணிந்துகொண்டார்கள். வரலாறுமுழுவதிலும் எத்தனையோ உருவகங்களிலும் வழிகளிலும் இந்த நிலைதானே காணப்பட்டு வருகிறது? ஒன்று நாம், 'வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரைத்' தொழவேண்டும்; அல்லது, வேறு யாரையாவது தொழவேண்டும். வெளி 13இல், தேவனைத் தொழுவதற்குப் பதிலாக மக்கள் மிருகத்தையும் அதன் சொரூபத்தையும் வணங்குகிறார்கள். இதில் நடுநிலை என்பது கிடையாது. இன்றைய நாளாக இருந்தாலும், அர்மகெதோன் யுத்தமாக இருந்தாலும், கர்மேல் மலை நிகழ்ச்சிபோல, நாம் யாரை வணங்குகிறோம் என்பதில் தெளிவாக இருக்கவேண்டும்; இது அவ்வளவு முக்கியம் வாய்ந்த விஷயமாக இருக்கிறது.

வியாழன், ஜூன் 21

## அர்மகெதோனும் கர்மேல் மலையும் - பகுதி 2

**1இராஜா 18:18-40 இல் என்ன நிகழ்ந்தது? எவ்வாறு முடிந்தது? இங்கு நடந்ததுபோலவே எல்லாம் நடக்கும் என்று நினைக்கக்கூடாது. கடைசி நாட்களில் மாபெரும் போராட்டம் இறுதிக்கட்டத்தை எட்டும்போது, உலகளாவிய அளவில் என்ன நிகழும் என்பதுபற்றி இச்சம்பவம் காட்டுவது என்ன?**

---

கர்மேல் மலையில் தேவனுடைய தீர்க்கதரிசியாகிய எலியாவுக்கும், பாகாலுடைய நூற்றுக்கணக்கான தீர்க்கதரிசிகளுக்கும் யுத்தம் நடந்தது. அங்கு நன்மையின் பக்கத்திலிருந்தது ஒருவர்தான்; தீமையின் பக்கத்திலிருந்தவர்கள் ஏராளம். யார் உண்மையான தேவன் என்பதுதான் பரீட்சை. வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த தேவனா, பாகாலா? பாகாலும் 'வலுசர்ப்பத்தைச்' சுட்டிக்காட்டுகிற ஓர் அடையாளம்தான்; இவ்வாறு வஞ்சிப்பது அவனுடைய உத்திகளில் ஒன்று. வெளி 12:9.

காளையைப் பலியிட்டு, அக்கினி இறங்கிவரும்படி பாகால் தீர்க்கதரிசிகள் வேண்டிக்கொண்டார்கள். காலையிலிருந்து மதியம்மட்டும் கத்திக்கொண்டிருந்தார்கள். 'உரத்த சத்தமாய்க் கூப்பிடுங்கள்; பாகால் தூங்கினாலும் தூங்குவான்' என்று எலியா நக்கல்பண்ணினார். 1இராஜா 18:27. பைத்தியம்பிடித்தவர்கள்போல பாகால் தீர்க்கதரிசிகள் செயல்பட்டார்கள். இரத்தம் வடியுமட்டும் பட்டயங்களால் தங்களைக் கீறிக்கொண்டார்கள். ஆடிக் களைத்து, அந்திப்பலி சமயத்தில்தான் ஓய்ந்தார்கள்.

எலியா காளையைத் துண்டித்து, மூன்று முறை தண்ணீர் ஊற்றச்சொல்கிறார்; சுற்றிலும் வாய்க்கால் போல தண்ணீர் நின்றது. தேவனிடம் ஓர் எளிய ஜெபத்தை எலியா ஏறெடுத்தார். தேவன் உடனே அக்கினியை அனுப்பி, பலிபீடத்தின் கல், கீழுள்ள மண் உட்பட அனைத்தையும் பட்சிக்கச்செய்தார். பாகால் அல்ல, தேவனே மெய்யான தேவன் என்பது சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணமானது.

**பாகாலின் தீர்க்கதரிசிகளுக்கு முடிவில் என்னவானது? இறுதி நாட்களிலும் என்ன நடக்குமென வெளி 16:13; 19:20,21 கூறுகின்றன?**

அர்மகெதோன்பற்றி இப்போதைக்கு பல விஷயங்கள் நமக்குத் தெரியாமல் இருக்கலாம்; ஆனால், அதன் விளைவுமட்டும் நிச்சயம்: தேவனுடைய எதிரிகள் அழிக்கப்படுவார்கள்; தேவனை பற்றியும் அவருடைய பரிசுத்தவான்கள் பற்றியும் நியாயம் நிரூபிக்கப்படும்.

---

அர்மகெதோனை மனதில் வைத்துப் பேசாவிட்டாலும், 1கொரி 15:1,2இல் பவுல் வலியுறுத்தும் கருத்து என்ன? எதிர்காலத்தில் நிகழப்போவதைக் கருத்தில்கொண்டால், பவுல் சொல்கிறபடி வாழ்வது ஏன் முக்கியமானது? அர்மகெதோனின் பின்னணியில்தான் வெளி 16:15 வருகிறது. இந்த இரண்டுமே நமக்கு வலியுறுத்துகிற கருத்து என்ன?

## மேலும் படிக்க:

“அர்மகெதோன் யுத்தம்பற்றிய விவரத்தில், பல இடங்களில் விசித்திரமான ஜீவிகளும் மோசமான நிகழ்வுகளும் வருகின்றன; ஆனால் மனிதர் வாழ்க்கைக்குப் பயன்தருகிற சத்தியம்தான் அதிகம் காணப்படுகிறது. உதாரணத்திற்கு வெளி 16:15: ‘இதோ, திருடனைப்போல் வருகிறேன். தன் மானம் காணப்படத்தக்கதாக நிர்வாணமாய் நடவாதபடிக்கு விழித்துக்கொண்டு, தன் வஸ்திரங்களைக் காத்துக்கொள்ளுகிறவன் பாக்கியவான்.’ வெளி 16:15. அர்மகேதோன்பற்றி விளக்கும் வேதப்பகுதியின் மையத்தில் வருகிற இந்த வசனம், இயேசுவின் வருகைக்கும் கடைசிக்கால நிகழ்வுகளுக்கும் ஆயத்தமாகும்படி வலியுறுத்துகிற பல புதிய ஏற்பாட்டு வசனங்களை நினைவூட்டுகிறது.

“இதேபோன்ற இன்னொரு வசனம் வெளி 17:14: ‘இவர்கள் ஆட்டுக்குட்டியானவருடனே யுத்தம்பண்ணுவார்கள், ஆட்டுக்குட்டியானவர் கர்த்தாதி கர்த்தரும் ராஜாதி ராஜாவுமாயிருக்கிறபடியால் அவர்களை ஜெயிப்பார்; அவரோடுகூட இருக்கிறவர்கள் அழைக்கப்பட்டவர்களும் தெரிந்துகொள்ளப்பட்டவர்களும் உண்மை உள்ளவர்களுமாய் இருக்கிறார்கள்.’ கடைசிக்காலத்தின் இறுதி யுத்தத்தில் போராடுகிறவர்களின் முக்கிய நோக்கம் ஆயுதங்களால் மற்றவர்களை அழிப்பது அல்ல, மாறாக தங்களுடைய தெய்வீக அழைப்புக்கும் தெரிந்துகொள்ளுதலுக்கும் உண்மையாக இருப்பதுதான். திரும்பவும் சொல்கிறேன், அர்மகெதோன் யுத்தம் மனதிற்கான ஒரு யுத்தம். இருதயம் சம்பந்தப்பட்ட ஒரு யுத்தம். அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர்மேல் முழுமெய்ப்பற்று வைக்கக் கொடுக்கப்படுகிற ஓர் அழைப்பு. வெளி 5:9,10,12; 13:8.” - யோன் பாலியன்.

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *வெளிப்படுத்தலில் சொல்லப்படும் நிகழ்வுகள் பல அங்குச் சுட்டிக்காட்டப்படுகிற இடங்களில் எழுத்தின்படியே நடைபெறும் என்று நம்புகிற ஒருவருக்கு எவ்வாறு உண்மையைப் புரியவைப்பீர்கள்? வசனங்களுக்கு இவ்வாறு அர்த்தம்காண்பது தவறான வழி என்பதை விளங்கச்செய்ய என்ன அணுகுமுறையைக் கையாள்வீர்கள்?*

2. *பாபிலோனின் தாக்கம் உலகம் முழுவதிலும் பரவியுள்ளது. பாபிலோனின் போதனைகள் சிலவற்றைக் கூறுங்கள். அந்தப் போதனைகளை இனங்கண்டு, தப்பித்துக்கொள்வதற்கு நாம் என்ன செய்யலாம்?*

3. *‘கிறிஸ்தவ உலகெங்கிலும் சபையும் அரசாங்கமும் கைகோர்க்கும்; அதன்பிறகுதான் பாபிலோனின் விழுகை முற்றுப்பெறும்’ என்று எலன் ஒய்ட் சொல்வதாக திங்கட்கிழமை பாடத்தில் படித்தோம். ‘சபையும் அரசாங்கமும் கைகோர்க்கும்’ என்பதைக் கவனியுங்கள். இதில் நமக்குக் கொடுக்கப்படுகிற எச்சரிப்பு என்ன?*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்
## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்கு

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

1. YOUTUBE க்குப் போய், **Hope TV India**

என்று டைப் பண்ணி, அதில் தெரியும் சின்னத்தை அழுத்துங்கள்.

அதின்கீழ் தமிழ்ப் பகுதியில் ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களைப் பார்க்கலாம்.

2. YOUTUBE க்குப் போய், **Tamil Sabbath School**

என்று டைப் பண்ணினால்,

ஓய்வுநாட்பள்ளிப் பாடங்களின் மொழிபெயர்ப்பாளர் நடத்தும் பாடங்களைப் பார்க்கலாம்.

---

Translated by *Marshall Isaac and Ezra David*
Printed by *Oriental Watchman Publishing House, Pune.*